OS: 509/2018

Date: 18.03.2022

பெயர் : மனோகர்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் வாதி கோவிலின் அறங்காவலர் உறுப்பினர் என்பதற்கு பதிவு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தேதி எனக்கு நியாபகம் இல்லை. தாவா சொத்திற்கு தென்புறமும் வடபுறமும் மனைகளாக பிரித்து சொத்துக்களை யார் விற்பனை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கோவிலுக்கு சம்மந்தப்பட்ட சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் 1, 2 சொத்துக்கள் தெரியும். அந்த சொத்துக்களின் சர்வே எண், பட்டா எண் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தான் trust க்காக ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதிலுள்ள புகைப்படம், கையொப்பம் என்னுடையதுதான். அது **பி.த.சா.ஆ.1**. பி.த.சா.ஆ.1 ஆவணம் 02.05.2017 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தேதி எனக்கு தெரியாது. சாட்சி ஆவணத்தை பார்த்து கூறும்படி கேட்டுக்கொண்டதற்கு சாட்சி தன்னால் பார்க்க இயலாது என்றும், கண்ணாடி கொண்டுவரவில்லை என்றும் பதிலளிக்கிறார். trust சம்மந்தப்பட்ட பதிவு ஆவணங்கள் பற்றி விவரம் எனக்கு தெரியாது, அதுகுறித்து நிர்வாகிகளிடம் தான் கேட்க வேண்டும். பி.த.சா.ஆ.1 trust ல் சுகுமாறன், சுப்ரமணியன், மனோகரன், ரமேஷ்பாபு ஆகியோர் சேர்ந்த பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது., மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நபர்களின் பதவி விவரம் எனக்கு தெரியாது, எனக்கு நியாபகம் இல்லை. நான் trust ல் என்ன பொறுப்பில் உள்ளேன் என்று எனக்கு நியாபகம் இல்லை, கையொப்பம் போட சொன்னதால் போட்டேன். பி.த.சா.ஆ.1 ல் உள்ள trust ல் உள்ள இதர நபர்களை இந்த தாவபாவில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் கோவில் சார்பாக வழக்கு நடத்துகிறேன் அதற்கும் trust க்கும் சம்மந்தம் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் கோவிலின் சொத்துக்களை பராமரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அந்த trust உருவாக்கப்பட்டது என்றும், நான் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. கோவிலுக்கு நிர்வாகம்தான் உள்ளது, trust கிடையாது. trust சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதை தள்ளுபடி செய்வதில் எனக்கு

ஆட்சேபனை இல்லை என்றால் அதுகுறித்து நான் பதிலளிக்க இயலாது எனது வழக்கறிஞர்தான் சொல்ல வேண்டும். trust ல் உள்ள உறுப்பினர்களை தரப்பினராக சேர்க்காமல் நான் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தர்மகர்த்தா என்ற முறையில் இநத் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள சாரம்சம் எனக்கு தெரியாது. 02.05.2017 ல் பி.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட பிறகு வா.சா.ஆ.14 எற்பட்டுள்ளது என்றும், ,அந்த தேதி முதல் தான் நான் trustee ஆக செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செயத் மாதத்தில் நான் Trustee ஆக இல்லை என்றும், அதனால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்ாறல் சரியல்ல. வா.சா.ஆ.14 ன் அடிப்படையில் தான் நான் Trustee ஆக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பு இருந்தே உள்ளேன். நான் அவ்வாறு Trustee ஆக இருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/ திரு.அஷ்பக் அகமது,
சார்பு நீதிபதி, ஓமலூர்.